| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF<br>Science for Sustainable Development | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
| | மாவட்டம் : | **தேனி** | காலம் : | **16/03/2024** | முதல் | **20/03/2024** |
| | அறிக்கை எண் : | **022/ 2024** | வெளியீட்டு நாள் : | **15/03/2024** | | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 37°-38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| **கடந்தவார வானிலை** (10.03.2024 **முதல்** 14.03.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 20-03-22024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10/03 | 11/03 | 12/03 | 13/03 | 14/03 | **தேதி** | **நாள்-1** 16/03 | **நாள்-2** 17/03 | **நாள்-3** 18/03 | **நாள்-4** 19/03 | **நாள்-5** 20/03 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 38 | 37 | 37 | 37 | 38 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 30 | 29 | 29 | 30 | 29 |
| 26 | 25 | 23 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 19 | 20 | 19 | 20 | 20 |
| 5 | 3 | 2 | 2 | 1 | மேக மூட்டம் (ஆக்டா) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 81 | 75 | 74 | 80 | 57 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 60 | 60 | 60 | 60 |
| 39 | 45 | 32 | 30 | 28 | | 20 | 20 | 20 | 20 | 20 |
| 5 | 8 | 4 | 6 | 7 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 6 | 6 | 6 |
| வட கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | **கிழக்கு** | **கிழக்கு** | **கிழக்கு** | **கிழக்கு** | **கிழக்கு** |

## குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலையானது 29°-30° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 19° - 20° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் தெளிவாக காணப்படும். மணிக்கு 6 கி.மீ வேகத்தில், கிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

**கால்நடை வளர்ப்பு :**

தமிழகத்தில் அடுத்த 3 நாட்களுக்கு 16.03.2024 முதல் 18.03.2024) உயர்ந்தபட்ச வெப்பநிலையானது இயல்பை விட 1 முதல் 2 டிகிரி செல்சியஸ் அதிகரித்து காணப்படும்.

வெப்பத்திலிருந்து தங்களது கால்நடைகளை பாதுகாக்க தினமும் போதுமான அளவில் தாதுக்கலவையினை கால்நடைகளுக்கு கொடுக்க வேண்டும்.

குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக்கலவையினை கொடுப்பது மிகவும் அவசியமாகும். ஈரமான சணல் சாக்குககளை மாட்டு கொட்டகைகளில் பக்கவாட்டில் கட்டி விடவும்.

கொடுக்கவும்.

**விவசாயம் :**
பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை கண்டிப்பாக அதிகாலை வேளை அல்லது அந்தி மாலை வேளைகளில் மட்டும் மேற்கொள்ள வேண்டும். விவசாயிகள் உங்கள் மண்ணின் ஈரப்பதத்தின் அடிப்படையில் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்யவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : வாழை, எலுமிச்சை, கால்நடை.**

**வாழை:**
வாழை பயிரில் தற்போது பியூசேரியம் வாடல் நோய் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. வாழையில் முதலில், அடிப்புற இலைகளில் குறிப்பாக இலை ஓரங்களில், மஞ்சள் நிறமாகி வாடிக் காய்ந்து காணப்படும். தாக்குதல் அதிகரிக்கும் போது, மரத்தின் உச்சி இலைகள் விறைப்பாக மாறும். அடி இலைகள், இலைக்காம்புடன் ஒடிந்து தண்டைச் சுற்றி தொங்கும்.

இதனை தவிர்க்க பயிர் சுழற்சி முறையை பின்பற்ற வேண்டும்.

இதனைக் கட்டுப்படுத்த ஒரு வாழைக் கன்றிற்கு 2கிலோ தொழுஉரம் + 40கிராம் டிரைக்கோடெர்மா விரிடி + 40கிராம் சூடோமோனஸ் + 200கிராம் வேப்பம் பிண்ணாக்கு போன்றவைகளை நன்கு கலந்து வாழை மரத்தின் தூர்பகுதியில் இருந்து ½ அடி தூரம் தள்ளி வைக்க வேண்டும்.

**எலுமிச்சை:**

எலுமிச்சையில் பழம் உறிஞ்சும் பூச்சியின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது.

இதனைக் கட்டுப்படுத்த மரங்களிடையே காணப்படும் களைச்செடிகளை அப்புறப்படுத்தி சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

10 லிட்டர் தண்ணீருக்கு 60 மில்லி என்ற அளவில் வேப்ப எண்ணெய் உடன் 10 மில்லி ஒட்டுபசை சேர்த்து 10 நாட்கள் இடைவெளியில் 2 முறை தெளிக்கவும்.

மேலும் ஒரு எக்கருக்கு 2 என்ற எண்ணிக்கையில் இனக்கவர்ச்சி பொறிகளை வைத்து (5லிட்டர் வாலியில் 3லிட்டர் தண்ணீர் 2 கிலோ அரிசி தவிடு 2 அழுகிய வாழைப்பழம் 2 அன்னாசிப்பழ துண்டு மற்றும் 100 கிராம் சர்க்கரை இவற்றுடன் 100 மில்லி நன்கு புளித்த தயிர் சேர்த்து வைக்க வேண்டும்.
விளக்குப் பொறிகளை வைத்தும் அந்துப்;பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.

**கால்நடை:**
நிலவும் வெப்பமான சூழ்நிலையில் கால்நடை கொட்டகைகளை முறையாக பராமரிப்பது மிகவு அவசியமாகும்.

கொட்டகைகளின் திசையமைப்பு நல்ல காற்று வசதி கிடைக்கும் படியாக இருக்க வேண்டும்.

சூரிய வெப்பம் கால்நடைகளை நேரடியாகத் தாக்காதவாறு அமைக்க வேண்டும்.

கொட்டகைகளின் பக்கவாட்டில் கோனி சாக்குகளை தண்ணீரில் நனைத்து கட்டி வைக்க வேண்டும்.

.